# சர்தார் வல்லப்பாய் படேலின் 150-வது பிறந்த ஆண்டை ஒட்டி நடைபெறும் “ஒற்றுமை நடைப்பயண” தொடக்க விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை.

இடம் – காந்தி திடல், கடற்கரை சாலை        தேதி – 08-11-2025

மரியாதைக்கு உரிய சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், நிகழ்ச்சி பொறுப்பாளர்கள் மற்றும் என் அன்பிற்கு உரிய மாணவ-மாணவிகள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

இன்று நடைபெறும் இந்த ஒற்றுமை நடைபயணம் (UNITY MARCH) ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல. “இரும்பு மனிதர்” சர்தார் வல்லப்பாய் படேலின் 150-வது பிறந்த ஆண்டை ஒட்டி நடைபெறும் இந்த நிகழ்ச்சி - நம்முடைய ஒற்றுமையை, நம்பிக்கையை, இளைஞர்களின் உறுதியை, தேசத்தின் பெருமையை, சர்தார் வல்லப்பாய் படேல் மீது நமக்கு இருக்கும் மதிப்பை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி.

நாடு சுதந்திரம் அடைந்த போது, 500-க்கும் மேலாக சிதறிக் கிடந்த ஆட்சி பரப்புகளை எல்லாம் – எத்தனை தடைகளை கடந்து – எதிர்ப்புகளை கடந்து – ஒன்று சேர்த்து, **இந்தியா** என்ற ஒரே தேசமாக உருவாக்கியவர் தான் நம்முடைய சர்தார் படேல். எந்த அச்சுறுத்தலுக்கும், எந்த விமர்சனத்திற்கும் அஞ்சாமல், திடமான சிந்தனையோடு, மன வலிமையோடு நாட்டை ஒன்று இணைக்க பாடுபட்டார்.

அவரது சிந்தனையும், உறுதியும், முயற்சியும், நிர்வாக திறனும் தான் இன்று நம்முடைய ஒற்றுபட்ட இந்தியாவை உருவாக்கி இருக்கிறது.

பாடுபட்டு ஒன்று சேர்த்த இந்தியாவில் தான் எத்தனை வேற்றுமைகள்**??** மொழியால், மதத்தால், இனத்தால். நிறத்தால், கலாச்சாரத்தால்.... ஒரு வண்ணக் கோலம் போல.**!!!** ஆனால், வேற்றுமையில் ஒற்றுமை (UNITY IN DIVERSITY) என்பதில் தான் இந்தியாவின் வலிமை இருக்கிறது என்றும், அதை பொதுவான அரசியல் அமைப்பு சட்டத்தின் அடிப்படையில் தான் ஒழுங்குபடுத்த முடியும் என்றும் சர்தார் படேல் நம்பினார்.

அந்த தொலை நோக்கு பார்வை தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நமக்கு சொல்லும் – **EK BHARAT SHRESHTHA BHARTH** கொள்கையின் அடிப்படை தத்துவம்.

இந்தியாவின் இந்த ஒற்றுமையை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இன்றைய இளைஞர்களுக்கு உண்டு. ஏனென்றால், நீங்கள் தான் இந்த நாட்டின் எதிர்காலம். நீங்கள் தான் இந்த நாட்டை வழிநடத்தப் போகிறீர்கள். அந்த வலிமையும் திறனும் உங்களுக்குத் தான் உண்டு.

இன்றைய இளைஞர்கள், அறிவும், ஆற்றலும், உறுதியும் கொண்டவர்களாக இருப்பதை நான் பார்க்கிறேன். கல்வி, விளையாட்டு, தொழில் நுட்பம், சேவை என்று எல்லா துறைகளிலும் நாட்டிற்கு பெருமை சேர்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றக் கூடிய திறமை- அதற்கான வாய்ப்பும் உங்களுக்குத் தான் உண்டு. அதனால் தான் பாரதப் பிரதமர் இளைஞர்களை YUVA SHAKTHI என்று சொல்லுகிறார்.

இன்னும் சுமார் 25 ஆண்டுகளில் எங்களை போன்ற முதியவர்கள் உயிரோடு இருக்க வாய்ப்பு இல்லை.

உங்களைப் போன்ற இளைஞர்கள் கையில் தான் இந்த தேசம் இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்தியாவை வளமான நாடாக, வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்றால் இளைஞர்களாகிய நீங்கள் ஒற்றுமை, நாட்டுப் பற்று, உழைப்பு, நேர்மை, அர்ப்பணிப்பு ஆகியவற்றை உங்களுடைய வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். அப்போது தான் புதிய இந்தியாவை உருவாக்க முடியும். சர்தார் படேலின் என்ற மாமனிதரின் வாழ்க்கையும் சிந்தனையும், அவருடைய மன உறுதியும் அதற்கு உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

அவரது நினைவாக, இன்று நீங்கள் மேற்கொள்ளும் இந்த நடை பயணம் வெறும் நடை பயணம் மட்டும் அல்ல. அது இளைஞர் பேரியக்கத்தின் வெளிப்பாடு. நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒரு யாத்திரை. நீங்கள் முன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் VIKSIT BHARAT@2047 அதாவது, சுதந்திரம் அடைந்த 100-வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலட்சியத்தை நோக்கிய பயணம்.

எத்தனை மொழிகள், எத்தனை மதங்கள், எத்தனை கலாச்சாரங்கள் இருந்தாலும் நாம் எல்லோரும் இந்திய தாயின் பிள்ளைகள் என்பதை இந்த பயணம் நமக்கு நினைவு படுத்த வேண்டும். நண்பர்களே...! வேற்றுமையில் ஒற்றுமை என்பது வாசகம் அல்ல. அதுதான் இந்தியாவின் ஆன்மா. அந்த ஆன்மாவை பாதுகாக்க நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அர்ப்புதமான நிகழ்ச்சிக்கு வழிகாட்டிய மாண்புமிகு பாரதப் பிரதமர், மத்திய அரசின் MINISTRY OF YOUTH AFFAIRS & SPORTS, மற்றும் MY BHARATH இயக்கத்திற்கும், இந்த நடை பயணத்தில் கலந்து கொண்ட இளைஞர்கள், நிகழ்ச்சி ஏற்பாடு செய்த அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி … வணக்கம் …**

**ஜெய் ஹிந்த்…**